Mr Kodiswaran

## பேச்சுவார்த்தைக்கு தடங்கலை ஏற்படுத்த விரும்பவில்லை

(கொழும்பு) —ரஞ்சன்

விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தை நடத்த முன்வருவதற்கு தடங்கலான சூழ்நிலையை உருவாக்க அரசு விரும்பவில்லை என்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் பேசிய பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்துள்ளார். மேலும் இப்பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா அரசாங்கம் நிலைமையை உன்னிப்பாக (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு எதிராகப் போர் நடத்தவில்லை; நடத்தப் போவதும் இல்லை

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு எதிராக தாம் எப்போதும் போர் நடத்த வில்லை என்றும் இனிமேல் நடத்தப்போவதும் இல்லை என்றும் சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் நம்பிக்கையினையும். ஆதரவையும் தமது அரசாங்கம் கோரி (4 ஆம் பக்கம் பார்க்க)

விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 தை (05 - 01 - 1991) சனிக்கிழமை ஓசை 3,0

## விசர்நரி கடித்த ஆறுபேர் வைத்தியவசதியின்றி அவதி

(கைதடி)

வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஆறு பேரை நரி ஒன்று கடித்துக் குதறியது. இச்சம்பவம் கைதடிப் பகுதியில் நடைபெற்றது

நேற்று முன்தினம் கைதடிப் பகுதியில் உள்ள வயலில் வேலை செய்துகொண்டு நின்ற ஆறுபேரை அப்பகுதிக்கு வந்த விசர் நரி ஒன்று கடித்துக் குதறியது. இதனால் இவர்கள் சந்திரிகை அரசினர் மருத்துவமனைக்குக் (4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா அரசுடன் பேச நாம் தரகர்களை நியமிக்கவில்லை

## அருளரின் சுய விளம்பரம் தேடலுக்கு செயலாளர் யோகி கண்டனம்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசுக்கும் எமக்குமிடையில் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கோ, பேச்சுவார்த்தை நடத்துவதற்கோ இடைத்தரகர்களாகச் செயற்பட நாம் எவருக்கும் அங்கீகாரம் அளிக்கவில்லை. இந்த யுத்தநிறுத்தம் தமது முயற்சியின் விளைவாக உருவானது எனத் தம்பட்டம் அடிப்பது தம்மை விளம்பரப்படுத்த எடுக்கும் முயற்சியே தவிர வேறொன்றுமல்ல.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் யோகரத்தினம்யோகி அவர்கள் ஈழநாதத்துக்கு அளித்த விசேட பேட்டி யொன்றில் தெரிவித்தார்.

சமீபகாலமாக வெகுசனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் அழைத்து, தானே இந்த யுத்தநிறுத்தத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ததாக "அருளர்" என்பவர் குறிப்பிட்டு வருவதையொட்டி திரு. யோகியுடன் நாம் தொடர்பு கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினை சிக்கலானது;

## கட்டுத்துவக்கு வெடித்து இருவர் காயம்

கட்டுத்துவக்கு வெடித்து உறக்கத்தில்இருந்த தாயும் மகனும் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட உதயபுரத்தைச் சேர்ந்த நா. இருக்கேதீஸ்வரி (வயது 24) என்பவரும் இவரது இரண்டு வயது மகன் ஜெகதீஸ்வரனும் வீட்டில் நித்திரைசெய்து கொண்டிருந்தபோது அருகில் வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு தற்செயலாக வெடித்ததில் இவர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இளைஞனை பாம்பு தீண்டியது

நேற்றுக்காலை நெல்வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது குடமியனைச் சேர்ந்த க. சுரேந்திரன் (24) என்பவர் இரத்தப்புடையன் பாம்பு தீண்டி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

## ரவிக்கு அஞ்சலி

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக்கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான அமரர் இ. ரவிசேகர் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று இடம் பெற்றது. திரு. அருண் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் விரிவுரையாளர் திரு. பொன். பூலோகசிங்கம் சத்தியநாதன் உட்பட பலர்

## யுத்தநிறுத்த அறிவித்தலின்பின் படுவான்கரை வீடுகள் தகர்ப்பு

(மட்டக்களப்பு)

ஏழுநாட்களுக்குப்புலிகளுடன் சண்டை இல்லை என சிறிலங்கா அரசு கூறிய அதே வேளை முதல்நாளான நேற்றே படுவான்கரைப் பகுதியில் உள்ள வெல்லாவெளியில் பொதுமக்களுக்குச் சொந்தமான நான்கு வீடுகளைச் சிறிலங்கா இராணுவத்தினர் குண்டுவைத்துத் தகர்த்துள்ளனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது படுவான்கரைப்பகுதியில் பலவீட் (4ஆம் பக்கம் பார்க்க)

## சினைப்பர் தாக்குதலுக்கு ஒரு போராளி மரணம்

(யாழ்ப்பாணம்)

காவலரணில் நின்ற போராளி ஒருவர் மீது ஆனையிறவு இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினர் சினைப்பர் தாக்குதலை மேற் [illegible] தார்.

நேற்று சினைப்பர் தாக்குதலால் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட இவர் அங்கு உயிரிழந்

# தரகர்களை நியமிக்கவில்லை

இவிதொச்சி மாவட்ட உதயபுரத்தைச் சேர்ந்த நா. திருக்கேஸ்வரி (வயது 24) என்பவரும் இவரது இரண்டு வயது மகன் ஜெகநீஸ்வரனும் வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்தபோது அருகில் வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு தற்செயலாக வெடித்ததில் இவர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அருளரின் சுய விளம்பரம் தேடலுக்கு செயலாளர் யோகி கண்டனம்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசுக்கும் எமக்குமிடையில் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கோ, பேச்சுவார்த்தை நடத்துவதற்கோ இடைத்தரகர்களாகச் செயற்பட நாம் எவருக்கும் அங்கீகாரம் அளிக்கவில்லை. இந்த யுத்தநிறுத்தம் தமது முயற்சியின் விளைவாக உருவானது எனத் தம்பட்டம் அடிப்பது தம்மை விளம்பரப்படுத்த எடுக்கும் முயற்சியே தவிர வேறொன்றுமல்ல.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் யோகரத்தினம்யோகி அவர்கள் ஈழநாதத்துக்கு அளித்த விசேட பேட்டியொன்றில் தெரிவித்தார்.

சமீபகாலமாக வெகுசனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் அழைத்து, தானே இந்த யுத்தநிறுத்தத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ததாக "அருளர்" என்பவர் குறிப்பிட்டு வருவதையொட்டி திரு. யோகியுடன் நாம் தொடர்பு கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினை சிக்கலானது; அவர்கள் கோரிக்கை நியாயமானது

- ஹிந்துஸ்தான் ரைம்ஸ்

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த காலங்களைப் போலல்லாது பலமான ஒரு அடிப்படையில் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர் என இந்தியாவில் இருந்து வெளியாகும் "ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" தலைது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

பலமானநிலையில் அவர்கள் அறிவித்துள்ள இந்தப்போர் நிறுத்தத்தைச் சிறிலங்கா அரசாங்கம் சரணாகதி என நினைத்துவிடக்கூடாது எனவும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை சிக்கலானது என்றும், ஆனால் அவர்களின் கோரிக்கைகள் நியாயமானது என்றும் இந்தவேளையில் தமி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மலாக்கா நீரிணைப்பகுதியில் 30 தமிழர் ஆயுதங்களுடன் கைது

(கோலாலம்பூர்)

மலாக்கா நீரிணையிலுள்ள பினாங் தீவுகளுக்கு சமீபமாக முப்பது இலங்கைத் தமிழர்கள் நவீன ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

மூன்று விசைப்படகுகளில் மோட்டார் போன்ற ஆயுதங்கள் சகிதம் பயணம் செய்து மலேசியா எல்லைக்குள் புக முயன்ற முப்பது இலங்கைத் தமிழர்களைச் சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். உரிய ஆவணங்கள் எதுவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு புதிய இராணுவத் தளபதியாக பிரிகேடியர் விமலரத்தினா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட கஜபாகுப் படைப் பிரிவை 1983 இல் தோற்றுவித்துப், பயிற்சியளித்தவரான பிரிகேடியர் விஜய விமலரத்தினா ஜனவரி 2 ஆம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத் தளபதியாக சிறிலங்கா அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நடவடிக்கைகளுக்கான பணிப்பாளராக கொழும்பில் பணியாற்றி வந்த இவரின் கீழ் ஆறு பட்டாலியன் இரா

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாயின் மரணச் செய்தி; இளைஞர் தற்கொலை முயற்சி

(நல்லூர்)

தாயின் மரணச் செய்தியை அறிந்ததும் உடன் அங்கு செல்லமுடியாது மனமுடைந்த நிலையில் நஞ்சருந்தித் தற்கொலை செய்ய முயன்ற இளைஞர் ஒருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்புப் பகுதியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனை பாம்பு தீண்டியது

நேற்றுக்காலை நெல்வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது குடமியனைச் சேர்ந்த க. சுரேந்திரன் (24) என்பவர் இரத்தப்புடையன் பாம்பு தீண்டி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

## ரவிக்கு அஞ்சலி

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக்கழகத் தாபகர்களில் ஒருவரான அமரர் இ. ரவிசேகர் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று இடம் பெற்றது. திரு. அருண் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் விரிவுரையாளர் திரு. பொன். பூலோகசிங்கம் சத்தியநாதன் உட்பட பலர் ரவிசேகர் விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றியபணிபற்றி பேசினர். இக்கூட்டத்தில் பெருமளவு மாணவர்கள் கலந்து கொண்டு ரவிசேகருக்கு அஞ்சலி செலுத்தினர்.

## அகதிமுகாமில் வயிற்றோட்டம்

(மல்லாகம்)

மல்லாகம் கனிஷ்டவித்தியாசாலையில் அமைந்துள்ள அகதி முகாமில் வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது.

கடந்த இரண்டு நாட்களில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சு. சின்னப்பிள்ளை (50) இ. தேவராணி (20) கா. கந்தையா (50) ஆகியோரே இவ்வாறு வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு மானிப்பா

(4ஆம் பக்கம் பார்க்க)

### அதிசயப் பசு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையில் பசு மாடு ஒன்று இரண்டு கன்றுகளை ஒரே தடவையில் ஈன்றுள்ளது.

இந்த இரண்டு கன்றுகளும் தாய் மாடும் நல்ல ஆரோக்கியமாகவே இருக்கின்றன. (க)

## யுத்தநிறுத்த அறிவித்தலின் பின் படுவான்கரை வீடுகள் தகர்ப்பு

(மட்டக்களப்பு)

ஏழுநாட்களுக்குப்புலிகளுடன் சண்டை இல்லை என சிறிலங்கா அரசு கூறிய அதே வேளை முதல்நாளான நேற்றே படுவான்கரைப் பகுதியில் உள்ள வெல்லாவெளியில் பொதுமக்களுக்குச் சொந்தமான நான்கு வீடுகளைச் சிறிலங்கா இராணுவத்தினர் குண்டுவைத்துத் தகர்த்துள்ளனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது படுவான்கரைப்பகுதியில் பலவீட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சினைப்பர் தாக்குதலுக்கு ஒரு போராளி மரணம்

(யாழ்ப்பாணம்)

காவலரணில் நின்ற போராளி ஒருவர் மீது ஆனையிறவு இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினர் சினைப்பர் தாக்குதலை மேற்கொண்டதில் அவர் உயிரிழந்தார்.

நேற்று சினைப்பர் தாக்குதலால் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட இவர் அங்கு உயிரிழந்தார்.

## இராணுவம் ஷெல் தாக்கு

(செ. த. மை.)

வசாவிளான் பாடசாலையில் முகாமிட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் தெற்குப் பக்கமாக மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர். அத்துடன் இடையிடையே துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். நேற்று வெள்ளிக்கிழமை இச்சம்பவங்கள் இடம் பெற்றன.

இராணுவத்தினர் மேற்கொண்ட 'ஷெல்'கள் தோட்ட வெளிகளில் வீழ்ந்து வெடித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ கைது செய்தவரை அடித்துக் கொன்றது

(படுவான்கரை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பட்டிருப்புப் பாலத்தில் அமைந்துள்ள இராணுவ காவல் நிலையத்தில் இருந்த ரெலோவினர் பொதுமகன் ஒருவரை கைது செய்து இராணுவ முகாமினுள் கொண்டு சென்று அடித்துக் கொன்றனர்.

நேற்று பகல் களுவாஞ்சிக்குடியையும் படுவான்கரையையும் இணைக்கும் பட்டிருப்பு பாலத்தடியில் சென்று கொண்டிருந்த கருணாகரன் என்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

## சட்ட விரோதமாகத் தங்கிய இந்திய அமைதிப்படை ஜவான்

(கொழும்பு)

இலங்கையில் சட்ட விரோதமாக தங்கியிருந்த இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது ஜனவரி 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: உ[illegible]ம்பயிடி

(4ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**தேவை**

சேந்திரயாரிப்பில் திறமை உடையவரும் - இடியப்பம் தயாரிப்பிலும் குசினிவேலைகளிலும் நன்கு அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். ஹொட்டல் றொலெக்ஸ் 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (R-998)

வெளிவந்து விட்டது

அர்த்த முகாமைத்துவம் நிதியும் உயர்தர வகுப்புகளுக்குரியது உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியவற்றுடன் வெளிவந்துவிட்டது தொகுப்பு தேவராஜன் ஜெயராமன் B Com (Hons) விலை ரூபா 48/- வெளியீடு - விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (B 1804)

**புதிய உயர் கல்லூரி** ஆரியகுளச் சந்தி, யாழ்ப்பாணம்.

ஆண்டுகள் 9, 10 O/L (1991 Dec)

ஆரம்பம்: 07-01-1991

(மாலை நேர வகுப்புகள்) ஆரம்பமாகின்றன.

DAY CLASSES 2ஆம் பிரிவு நடைபெறுகின்றது. (B 1810)

# S.P.S. ரான்ஸ்போட் சேவிஸ்

நிறுவனத்தினர்

மீண்டும் தமது சேவையை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

27, விக்ரோரியா வீதி. யாழ்ப்பாணம்.

(B-1814)

## மகாபொல

## முற்பண கொடுப்பனவு

## ஜனவரி 1991

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் கீழ்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

I, கலைப்பீட 1 ஆம் வருட மாணவர்கள்

| | | |
|---|---|---|
| கலைப் பிரிவு | 03-0 -91 | 9 00-12 00 |
| வர்த்தகப் பிரிவு | 01-01-91 | 1 30-3 00 |
| நிர்வாகப் பிரிவு | 08-01-91 | 9.00-12 00 |

(II) விஞ்ஞானபீட 1 ஆம் வருட மாணவர்கள்

| | |
|---|---|
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | 03-01 91 - 1 30 - 3 00 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 04-01-91 - 9-00 - 12.00 |
| III மருத்துவபீட 1 ஆம் வருட மாணவர்கள் | 08-01-91 - 1-30 - 3 00 |

# NEW BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கலை, வர்த்தகம்

## A/L 90, 91, 92

- பொருளியல் – லோகசிங்கம், வரதராஜன்
- வர்த்தகம் – பிரபல விரிவுரையாளர்
- கணக்கியல் – யோகராஜா
- அளவையியல் – விக்கி
- தமிழ் – மீரா
- இந்துநாகரிகம் – கிருஷ்ணா

**ஆரம்பம்: 06-01-1991**

ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி

(B/1775)

# விக்னா டியூசன் சென்ரர்

53 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

இறுதிப் பிரிவு 5

O/L Day Classes

ஆரம்பம்: 7-1-1991 (8 30 — 1. 30)

பிரிவு 3

Evening Classes

ஆரம்பம்: 9-1-1991 (3. 30 — 5. 15)

Sat - Sun Classes

ஆரம்பம்: 5-1-1991 (3. 15 — 5. 15)

**O.L Dec.,**

**ஆண்டு 6, 7, 8, 9, 10 (2 30 - 5.15)**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்: 9-1-1991**

குறிப்பு: (I) கட்டமை, கட்டுப்பாட்டுடன் நடைபெறும் ஒரே நிறுவனம்.

(II) O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

(III) விருதி வசதி செய்து கொடுக்கப்படும்.

(B. 1806)

## அறிவித்தல்

யூனிற்றி பாடசாலை சேவை

மேற்படி சேவை நடாத்துவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் மீண்டும் சா/டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் 6-1-91 ஞாயிறு பி.ப 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சேவையில் ஈடுபட விரும்பும் பிள்ளைகளின் பெற்றோரை தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**UNITY SCHOOL SERVICE**

CHAVAKACHCHERI.

(R-1001)

## முகாமையாளர் தேவை

யாழ். நகரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிக்கு பெண் முகாமையாளர் தேவை. வயது 35-45க்கு இடைப்பட்டவராகவும் நிர்வாகத்திறமை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

15-01-1991க்கு முன் தொடர்பு கொள்ளவும்

அதிபர்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 6, பருத்தித்துறை வீதி.

(முதலாம் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

B 1790

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

# AL - 91

## DAY CLASSES

ஆரம்பம். 07. 01. 1991 (காலை:8 00மணி)

**SPOKEN ENGLISH**

by: Britto

புதிய பிரிவு ஆரம்பம் 05-01-1991 (காலை9 00 மணி)

(B-1808)

## பாரதி கல்வி நிலையம்

சித்தன்கேணி

## O/L Paper Class

ஆரம்பம்: 06 01 1991

ஞாயிற்றுக்கிழமை காலை 6 30 மணி

- விஞ்ஞானம் – திரு. J R. தசி
- கணிதம் – திரு. நவராஜா

ஏனைய பாடங்களும் ஆரம்பமாகின்றன.

ஆண்டு 7, 8, 9, 10, 11ஆம்

வகுப்புகளுக்கு

யாழ்ப்பாணம்.

(B-1814)

மகாபொல

முற்பண கொடுப்பனவு

ஜனவரி 1991

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் கீழ்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

I, கலைப்பீட 1 ஆம் வருட மாணவர்கள்

| | | |
|---|---|---|
| கலைப் பிரிவு | 03-0 -91 | 9 00-12 00 |
| வர்த்தகப் பிரிவு | 04-01-91 | 1 30-3 00 |
| நிர்வாகப் பிரிவு | 08-01-91 | 9.00-12 00 |

(II) விஞ்ஞானபீட 1 ஆம் வருட மாணவர்கள்

| | |
|---|---|
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 03 01 91 - 1 30 - 3 00 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 04-01-91 - 9-00 - 12.00 |
| III மருத்துவபீட 1 ஆம் வருட மாணவர்கள் | 08-01-91 - 1-30 - 3 00 |

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கவேண்டியவை:

(I) பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை

(II) ரூ 2/- பெறுமதியான முத்திரை

(III, மாணவர் பதிவுப்புத்தகம்

-பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.

(B/1812)

# நல்லூர் பிரதேச சபை

## திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குத்தகை விளம்பரம்- கேள்வி அறிவித்தல்

1991

மேற்படி விடயம் சார்பான எனது 12 11 90, 21 12 90 திகதிகளில் "ஈழநாதம்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிட்ட குத்தகைகளில் கீழ்வருவனவற்றிற்கு மீண்டும் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வி மதிப்பீட்டுத்தொகை, கேள்விப் பத்திரப்பணம், வைப்புப்பணம் ஆகியவற்றில் மாற்றம் இல்லை ஆயினும் திருநெல்வேலி சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல 2 கோழி இறைச்சிக் கடையாக மாற்றப்பட்டு குறைந்தபட்ச மதிப்பீட்டுத் தொகை ரூ 10,000/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கேள்விப்பத்திரங்கள்யாவும் 16 1 91 நண்பகல்12 00 மணி வரை வழங்கப்படும் கேள்விகள் யாவும் 17 1 91 நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மற்றும் தேவையான விபரங்கள் சபைப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

1 திருநெல்வேலி சந்தை கோழி இறைச்சிக்கடை
2 கோண்டாவில் ஸ்ரேசனடிச் சந்தை
3 கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை
4. பொற்பதி வீதி ஆட்டிறைச்சிக் கடை
5 கோண்டாவில் ஸ்ரேசனடிச் சந்தை ஆ/இ கடை
6. 327. பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை
7. இணுவில் பஞ்சாத்தடி வீதி ஆட்டிறைச்சிக் கடை,

ஆ. மகாலிங்கம்

நல்லூர் பிரதேச சபைப் பணிமனை, விசேட ஆணையாளர்,

திருநெல்வேலி 8 11 1991 நல்லூர் பிரதேச சபை,

(B/1809

O/L Day Classes

ஆரம்பம்: 7-1-1991 (8 30 — 1. 30)

பிரிவு 3

Evening Classes

ஆரம்பம்: 9-1-1991 (2. 30 — 5. 15)

Sat - Sun Classes

ஆரம்பம்: 5-1-1991 (2. 15 — 5. 15)

O/L Dec.,

ஆண்டு 6, 7, 8, 9, 10 (2 30 - 5.15)

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 9-1-1991

குறிப்பு: (I) கடமை, கட்டுப்பாட்டுடன் நடைபெறும் ஒரே நிறுவனம்.

(II) O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

(III) விருந்தி வசதி செய்து கொடுக்கப்படும்.

(B. 1806)

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

புதிய வகுப்புகள் யாவும்

தை 5 முதல்

(B/1796)

ஆரம்பம்: 07. 01. 1991 (காலை:8 00மணி)

**SPOKEN ENGLISH**

by:Britto

புதிய பிரிவு ஆரம்பம் 05-01-1991 (காலை9 00 மணி)

(B-1805)

# பாரதி கல்வி நிலையம்

சித்தன்கேணி

## O/L Paper Class

ஆரம்பம்: 06 01 1991

ஞாயிற்றுக்கிழமை காலை 6 30 மணி

- விஞ்ஞானம் — திரு. J R. சூரி
- கணிதம் — திரு. நவராஜா

ஏனைய பாடங்களும் ஆரம்பமாகின்றன.

ஆண்டு 7, 8, 9, 10, 11ஆம் வகுப்புகளுக்கு

மாணவர்கள் பதிவினை மேற்கொள்ளவும்.

புதிய பிரிவு: **Spoken English With Grammar** by BRITTO

சனி, ஞாயிறு — 3-00 மணி

(B/1811)

# ஹோமியோபதி வைத்திய டிப்ளோமா வகுப்புகள்

## Diploma in Homoeopathy Medicine & Surgery

(22 வருடகால நீண்ட இடைவெளியின் பின்னர்19 1 91 இல் மீண்டும் யாழ் நகரில் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.)

1. கல்வித்தகைமை; க.பொ.த. (சா/த)-விஞ்ஞானம்/ சுகாதாரவியல் சித்தி
2. வயது: 18 தொடக்கம் 40 வரை
3. விரிவுரைகள் யாவும் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். போதனைக்கு இலகுவாக ஆங்கிலம்,லத்தீன் மொழிகளும் உபயோகிக்கப்படும்.
4. காலம்; 3 வருடங்கள்
5. மருத்துவ சங்கத்தின் பதிவுக்கும் பரீட்சைக்கும் (வெளிவாரி) உரிய பாடத்திட்டங்கள்.
6. பரீட்சை முடிவில் தொழில் புரிவதற்கான டிப்ளோமா (D H M S) சான்றிதழ் வழங்கப்படும்,
7. 1970 ஆம் ஆண்டிற்குப் பின் பரீட்சைக்கு தோற்றாத சகல ஹோமியோபதி வைத்தியர்களுக்கும் விசேட வகுப்புகள் நடாத்தப்படும்.

உங்கள் பதிவுகட்கு

மருத்துவக் கல்லூரி,

இல. 54, பருத்தித்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

நிர்வாகி

Dr. V.P சுந்தரராஜன்

எஸ்.எம்.ஏ

(B/1720)

## சிந்தனைக்கு

கொள்கை அளவில் ஒன்றை ஏற்றுக் கொள்வதாக நீ கூறினால், அதைச் செயல்படுத்த உனக்குச் சிறிதும் உத்தேசமில்லை என்று பொருள்.

— ஓட்டோ வொன் பிஸ்மார்க்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 05-01-91
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த.பெ.எண்.05

# ஏமாற்ற விடவில்லை என்பதுவே உண்மை

விடுதலைப் புலிகள் எம்மை ஒருமுறை ஏமாற்றி உள்ளனர், நாம் அவதானமாக இருக்க வேண்டும். புலிகள் மீது நான் வைத்திருந்த நம்பிக்கைக்கு அவர்கள் துரோகம் செய்துவிட்டார்கள் என தனது இரண்டு ஆண்டு ஆட்சிக்கால நிறைவு விழாவில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

பிரேமதாசாவின் இந்தக் குற்றச்சாட்டு விடுதலைப் புலிகளைப் பொறுத்தோ அல்லது தமிழரைப் பொறுத்தோ ஏற்புடையதல்ல. கடந்த கால பௌத்த சிங்கள ஆட்சியாளர்களின் ஏமாற்றுக்களும் நம்பிக்கைத் துரோகங்களும் தமிழரையும் தமிழ்த் தலைவர்களையும் ஏமாற்றியது போன்று இம்முறை ஏமாற இடமளிக்காமல், விடுதலைப் புலிகள் தம்மையும் தமிழ் மக்களையும் பாதுகாத்துக் கொண்டார்கள். அதாவது ஏமாற்றவுமில்லை ஏமாற்றப்படாமல் பார்த்துக்கொண்டார்கள்.

கடந்தகால இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழர்கள் கட்சி பேதமின்றி ஆட்சிக்கு வந்த சகல பௌத்த சிங்கள ஆட்சியாளர்களாலும் ஏமாற்றப்பட்டார்கள். 1956 ஆம் ஆண்டு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஸ்தாபகர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க கிழித்தெறிந்தார். அத்துடன் 1965 இல் செல்வநாயகம் அவர்களுடன் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் பிரதமருமான டட்லி சேனநாயக்கா செய்து கொண்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்தாமல் ஒரு மூலையில் போட்டுவிட்டார். இவை எல்லாம் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்ட வரலாறாகும்.

இவற்றிற்குப் பிறகு எத்தனையோ இழப்புக்களின் பின், 1987 இல், தமிழர் தமக்கு வழங்கப்பட்ட உரிமைகள் எதுவும் போதாது என புறக்கணித்த இந்திய-சிறிலங்கா உடன்படிக்கையில் இருந்த சிறு சலுகைகளைக் கூட வழங்குவதற்கு பௌத்த சிங்கள ஆட்சியாளர்கள் தயாராகவில்லை. தமிழரை ஏமாற்றுவதிலேயே குறியாக இருந்தனர்.

இவ்வாறாக நெருக்கடிகள் வரும்போது ஒப்பந்தங்கள் செய்வதும் பின்னர் அதைக் கிழிப்பதும், மீறுவதும் அமுல்படுத்தாமல் விடுவதுமே கடந்த கால பௌத்த சிங்களவரின் இராஜதந்திரமாக இருந்து வந்துள்ளது. மேலும், நெருக்கடிகள் ஏற்படும்போது, ஆணைக்குழுக்கள், சர்வகட்சி மாநாடுகள் என்பன அமைப்பதும் கூட்டுவதும், பின்னர் அவற்றின் மூலம் பிரச்சினையை பின்போடுவதுமே ஆட்சியாளர்களின் தந்திரமாகவும் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் பதின்நான்கு மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம், புலிகள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள் என்று கூறுவதில் எந்தவித நியாயமுமில்லை. ஏனெனில் பதின்நான்கு மாதங்கள் சிறிலங்கா அரசாங்கம் புலிகளுடன்

# சுதேச உற்பத்தியை ஊக்குவிப்பது காலத்தின் தேவையாகும்

சுதந்திரமாக நாம் வாழ்வதற்கு இன்னொன்றின் மீது தங்கி வாழாமல் இருப்பதை நடைமுறையில் கடைப்பிடிப்பதே பிரதானமானதாகும். இவ்வாறாக அண்மையில் இடம்பெற்ற சுதேச உணவு உற்பத்தியின் வளர்ச்சி என்ற மாநாட்டில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கருத்தாகும். தமிழீழ விடுதலைப் போராட்டமானது கூர்மையடைந்து வரும் இன்றைய சூழ்நிலையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவது தவிர்க்க முடியாததே. ஆனால் இதனை தவிர்த்து அதற்கு எதிராக 'உணவுப் போர்' ஒன்றினை நாம் நடத்த வேண்டும்.

இதற்கு ஏற்பாடாக பின்வரும் நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டியது அவசியமானதாகும். முதலாவதாக யாதெனில் முதலாவதாக நாம் எமது சூழலில் கிடைக்கக் கூடிய உணவினை உண்பதற்கு பழக்கப்படுத்தல் வேண்டும். சூழலுக்கு ஏற்ற முறையில் எமது உணவு முறைகளையும் மாற்றியமைக்க வேண்டும். இன்னமும் சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து எதையும் எதிர்பார்க்காமல் எமது சூழலில் சுயஉற்பத்தியில் இருந்து கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களை சாப்பிடப் பழக வேண்டும்.

எடுத்துக்காட்டாக மரவள்ளி மூலமாகவோ, பனங்கிழங்கில் இருந்து பெறக் கூடிய ஒடியல், புழுக்கொடியல், மற்றும் குரக்கன், சாமை, கொள்ளு மூலமாகவோ பெறக் கூடிய மாவினை பயன்படுத்தி உணவினை தயார் செய்ய பழக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் நாம் உணவுப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதோடு, எமது உற்பத்தி, எங்களது என்ற சுயகௌரவத்தையும் பெறுகிறோம். இதுவே எமது விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதற்குரிய உத்வேகத்தையும் அளிக்கும். எதிரி எம்மை பொருளாதார மற்றும் உணவுத் தடையினால் வெற்றி கொள்ள முடியாது போய்விடும். இந்த விதமாக நாம் உள்ளூர் உணவுப் பழக்கத்தை பழக்கிக் கொள்வதன் மூலம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லலாம்.

மறுவளமாக பார்த்தால் இந்த உணவு உற்பத்தியை நாம் பழக்கப்படுத்திக்கொள்வதன் மூலம் விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பினை அளி

முறைப்படுத்தப்பட்டதை நாம் இங்கு அவதானிக்கலாம். விற்பனையாளர்கள் கண்காட்சி மூலமாகவோ, கருத்தரங்குகள் மூலமாகவோ மற்றும் விளம்பர மூலமாகவோ மக்களுக்கு இந்தக் கருத்துக்கள் சென்றடைய வழி வகுக்க வேண்டும். பாவனையாளர்களும் இத்தகைய வழிகளில் செல்ல வேண்டும்.

நகரங்கள் மற்றும் கிராம மட்டங்களில் உள்ள மக்களுக்கு பல கருத்தரங்குகளை, சிற்றூரவைகள், வட்டங்கள் மூலமாக ஆராய்ச்சி நிறுவனங்கள் நடத்த வேண்டும். குறிப்பாக பல்கலைக்கழகம், பாடசாலைகள் மற்றும் கைத்தொழில் நிலையங்களிலும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு அழைப்புக்களை எதிர்பார்க்காமல் தாமாகவே முன்வர வேண்டும்.

மூன்றாவதாக எரிபொருட்களின் தட்டுப்பாட்டை முறியடிக்க வேண்டியதன் அவசியமும் மக்களுக்கு இருக்கிறது. இதற்கான வழிமுறைகளையும் மேற்கூறிய வகையில் தொழில்நுட்ப உதவியாளர்களின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டும். இந்தக் கருத்துக்கள் பேச்சளவில் இல்லாது உரியவர்களுக்கு சென்றடைய ஆன முயற்சிகளை ஆராய்ச்சியாளர்களும், புத்திஜீவிகளும் மேற்கொள்ள வேண்டும்.

நான்காவது பிரச்சினையாக கூறப்படும் பசளை அதாவது உரம் பற்றிய விளக்கமாகும். செயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட உரத்திற்கு தடை ஏற்பட்ட இந்த வேளையில் அதனை முறியடிக்கக் கூடிய வகையில் இன்னொரு முறையினை உருவாக்க வேண்டும். இயற்கைப் பசளையின் சிறப்பத்தையும், அதற்கான வழிமுறைகளையும் அறிவித்தல் வேண்டும். மீண்டும் மீண்டும் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று கூறாது விளக்கமறிந்தவர்கள் காலத்தின் தேவை உணர்ந்து செயல்பட வேண்டும்.

வழமையாக பயிர்கள் செய்வதற்குரிய விதைகள் வட்டக்கச்சியில் உள்ள விதைகள் ஆராய்ச்சி நிலையத்திலேயே விதைக்கப்பட்டு பின்னர் அவை குண்டசாலை விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னரே வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்படுகின்றது. ஆனால் இந்த வருடத்திற்கான விதைகள் வட்டக்கச்சியில் விதைக்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவார்கள். இவற்றையும் நிவர்த்தி செய்து பயிர்களை நாம் பயிரிட வேண்டும்.

இவற்றோடு வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைகளும் மக்களுக்கு கிடைக்கவேண்டும். சுதேச உணவு உற்பத்தி மூலம் கிடைக்கக் கூடிய கலோரிகளைப் பற்றி மக்களுக்கு உணர்த்த வேண்டும். அத்துடன் இந்த உணவுப் பொருட்களில் இருந்து கிடைக்கக்கூடிய சத்தின் தன்மையும் தெரியப்படுத்த வேண்டும். புரதம், காபோவைதரேற்று, கல்சியம், இரும்புச் சத்து, தாதுப் பொருள்கள் மற்றும் விற்றமின்கள் பற்றிய விளக்கம் அவசியம் தேவைப்படுகிறது.

மேற்கூறப்பட்ட விளக்கங்களை, ஆய்வுகளை, கருத்தரங்குகளை பத்திரிகைகள் வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ எடுத்துச் செல்ல வேண்டியது அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் வைத்திய அதிகாரிகளின் தலையாய கடமையாகும்.

முடிவாக மேற்கூறிய கருத்துக்களை கவனித்து, வெற்றிகரமாக செய்வதற்கு பல்கலைக்கழக புத்திஜீவிகள், வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுஸ்தாபனங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அவர்கள் இதனை மேற்கொள்ள முன்வர வேண்டும். இத்தகைய சேவை காலத்தின் கடமை என்பதை விட காலத்தின் தேவை என்றே கருதலாம். - உமா

# ஈராக்கிய தூதுவர்களை பிரிட்டன் வெளியேற பணிப்பு

(லண்டன்)

பிரிட்டனிலுள்ள ஈராக் தூதுவராலயத்தைச் சேர்ந்த ராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகள் உட்பட ஈராக்கியர்கள் அனைவரையும் நாட்டைவிட்டு 24 மணிநேரத்தினுள் வெளியேறும்படி பிரிட்டன் கோரியுள்ளது.

வளைகுடாவில் போர் மூளுமானால் உலகெங்கும் பெரியளவிலான தாக்குதல் மேற்கொள்ளப்படும் என ஈராக் அறிவித்தமையினைத் தொடர்ந்து பிரிட்டன் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஆட்சியாளர்களின் ஏமாற்றுக்களும் நம்பிக்கைத் துரோகங்களும் தமிழரையும் தமிழ்த் தலைவர்களையும் ஏமாற்றியது போன்று இம்முறை ஏமாற இடம் கொடுக்காமல், விடுதலைப் புலிகள் தமமையும் தமிழ் மக்களையும் பாதுகாத்துக் கொண்டார்கள். தொடர்ந்து ஏமாற்ற விளைந்தமை ஏமாற்றப்படாமல் பார்த்துக்கொண்டார்கள்.

கடந்தகால இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழர்கள் கட்சி பேதமின்றி ஆட்சிக்கு வந்த சகல பௌத்த சிங்கள ஆட்சியாளர்களாலும் ஏமாற்றப்பட்டார்கள். 1956 ஆம் ஆண்டு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஸ்தாபகர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க கிழித்தெறிந்தார். அத்துடன் 1965 இல் செல்வநாயகம் அவர்களுடன் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் பிரதமருமான டட்லி சேனநாயக்கா செய்துகொண்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்தாமல் ஒரு மூலையில் போட்டுவிட்டார். இவை எல்லாம் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்ட வரலாறாகும்.

இவற்றிற்குப் பிறகு எத்தனையோ இழப்புக்களின் பின், 1987 இல், தமிழர் தமக்கு வழங்கப்பட்ட உரிமைகள் எதுவும் போதாது என புறக்கணித்த இந்திய-சிறிலங்கா உடன்படிக்கையில் இருந்த சிறு சலுகைகளைக் கூட வழங்குவதற்கு பௌத்த சிங்கள ஆட்சியாளர்கள் தயாராகவில்லை. தமிழரை ஏமாற்றுவதிலேயே குறியாக இருந்தனர்.

இவ்வாறாக நெருக்கடிகள் வரும்போது ஒப்பந்தங்களைச் செய்வதும் பின்னர் அதைக் கிழிப்பதும், மீண்டும் அமுல்படுத்தாமல் விடுவதுமே கடந்த கால பௌத்த சிங்களவரின் இராஜதந்திரமாக இருந்து வந்துள்ளது. மேலும், நெருக்கடிகள் ஏற்படும்போது, ஆணைக்குழுக்கள், சர்வகட்சி மாநாடு என்பன அமைப்பதும் கூட்டுவதும், பின்னர் அவற்றின் மூலம் பிரச்சினையை பின்போடுவதுமே ஆட்சியாளர்களின் தந்திரமாகவும் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் பதின்நான்கு மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம். புலிகள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள் என்று கூறுவதில் எந்தவித நியாயமுமில்லை. ஏனெனில் பதின்நான்கு மாதங்கள் சிறிலங்கா அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது உண்மைதான். ஆனால் இந்த பதின்நான்கு மாத பேச்சுவார்த்தையின் பலாபலன் என்ன? தமிழருக்கு அரசாங்கம் வழங்க முன்வந்த உரிமைகள் என்ன?

பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட ஆறாவது அரசியல் திருத்தச் சட்டத்தை நீக்குதல், வடக்கு - கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைத்தல் வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்தல், பொலிஸ் படைக்கு ஆட்சேர்த்தல் போன்ற முக்கிய விடயங்களில் எதில் முன்னேற்றம் காணப்பட்டது? எது நடைமுறைப்படுத்தப்பட்டது?

அதேவேளை விடுதலைப் புலிகளால் தீவிரமாக ஆட்சேபிக்கப்பட்ட சிங்கள குடியேற்றத்திட்ட வேலைகள் நிறுத்தவோ இடைநிறுத்தப்படவோ இல்லை. கிழக்கில் ஆயுதப் படையினரின் அதிகரிப்பு குறைக்கப்படவுமில்லை.

இவ்வாறான முன்னைய தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியதுபோன்று விடுதலைப் புலிகளையும் ஏமாற்றுவதும், மோசடி செய்யும் முயற்சியிலும் சிறிலங்கா அரசாங்கம் இறங்கியது. ஆனால் விடுதலைப் புலிகள் ஏமாறத் தயாராக இருக்கவில்லை.

அத்தோடு முன்னைய தமிழ்த்தலைவர்களைப் போன்று விடுதலைப் புலிகள் கையாலாகாத நிலையில் இருக்கவும் இல்லை. முன்னைய தலைவர்கள் ஏமாற்றப்பட்டபோது அடுத்தவழி என்னவென்று தெரியாது தடுமாறினார்கள். போராட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகள் அவ்வாறு ஏமாறவும் இல்லை போராட்டத்தைத் தொய்யவிடவுமில்லை. அடுத்தவழி தெரியாமல் தடுமாறவுமில்லை.

இவ்வாறான நிலையில், தமிழ் மக்களோ, புலிகளோ ஏமாற்றினார்கள் என்பதை விட்டு தமிழர்கள் விழிப்படைந்துவிட்டார்கள் இனி ஏமாற்றமுடியாது என்பதை உணர்ந்துகொண்டால் சரி.

உணவு முறைகளையும் மாற்றியமைக்க வேண்டும். இல்லாமும் சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து எதையும் எதிர்பார்க்காமல் எந்த சூழலில் சுயஉற்பத்தியில் இருந்து கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களை சாப்பிடப் பழக வேண்டும்.

எடுத்துக்காட்டாக மரவள்ளி மூலமாகவோ, பனங்கிழங்கில் இருந்து பெறக்கூடிய ஒடியல், புழுக்கொடியல், மற்றும் குரக்கன், சாமை, கொள்ளு மூலமாகவோ பெறக்கூடிய மாவினை பயன்படுத்தி உணவினை தயார் செய்ய பழகிக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் நாம் உணவுப் பிரச்சினையையே தீர்த்துக் கொள்வதோடு, எமது உற்பத்தி, எங்களது சுயகௌரவத்தையும் பெறுகிறோம். இதுவே எமது விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதற்குரிய உத்வேகத்தையும் அளிக்கும். எதிரி எம்மை பொருளாதார மற்றும் உணவுத் தடையினால் வெற்றி கொள்ள முடியாது போய்விடும். இந்த விதமாக நாம் உள்ளூர் உணவுப் பழக்கத்தை பழக்கிக் கொள்வதன் மூலம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லலாம்.

மறுவளமாக பார்த்தால் இந்த உணவு உற்பத்தியை நாம் பழக்கப்படுத்திக்கொள்வதன் மூலம் விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பினை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த வாய்ப்பினை அவர்களுக்கு அளிப்பதன் மூலம் மேலும் உற்பத்தியை பெருக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

மேற் கூறிய கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்தானது இங்கு கவனிக்கத் தக்கதாகும். மக்கள் சிவப்பு அரிசிமற்றும் கோதுமை மாவினையே அதிகம் உபயோகிக்கின்றார்கள் என்றும் இதனால் சந்தையில் மரவள்ளிக் கிழங்கு, பனம் உணவு உற்பத்தி மற்றும் பி ஜி 11 ரக நெல் ரகங்களுக்கு சந்தை வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது எனினும் இதனால் விவசாயிகள் நஷ்டப்படுகின்றார்கள் என்றும் அவர்களை மேலும் ஊக்குவிக்க முடியாது போய் விடுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய நிலைமையை பாவனையாளர்களும் வர்த்தகர்களும் கருத்திற் கொண்டும் தமது உணவு நெருக்கடியையும் உத்தேசித்து தமது பாவனையை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகின்றது தக்கதன்றே ஒரு சில கட்டுப்பாடுகளை வகுத்து சுதேசிய மனப்பாங்குடன் செயல்பட வேண்டும் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் அந்நிய துணி எரிப்பும் சுதேசதர் ஆடையும் தடை நுட்ப உதவியாளர்களின் உதவியுடன் மேற்கொள்ளவேண்டும். இந்தக் கருத்துக்கள் பேச்சளவில் இல்லாது உரியவர்களுக்கு சென்றடைய ஆன முயற்சிகளை ஆராய்ச்சியாளர்களும், புத்திஜீவிகளும் மேற்கொள்ளவேண்டும்.

நான்காவது பிரச்சினையாக கூறப்படும் பசளை அதாவது உரம் பற்றிய விளக்கமாகும். செயற்கையான முறையில் தயார்செய்யப்பட்ட உரத்திற்கு தடை ஏற்பட்ட இந்த வேளையில் அதனை ஈடுசெய்யக்கூடிய வகையில் இயற்கையான முறையினை உருவாக்கவேண்டும். இயற்கைப் பசளையின் சிறப்பம்சத்தையும், அதற்கான வழிமுறைகளையும் அறிவித்தல் வேண்டும். மீண்டும் மீண்டும் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று கூறாது விளக்கமறிந்தவர்கள் காலத்தின் தேவை பொருள்கள் உற்பத்தி பற்றிய விளக்கம் அவசியம் தேவைப்படுகிறது.

மேற்கூறப்பட்ட விளக்கங்களை, ஆய்வுகளை, கருத்தரங்குகள் பத்திரிகைகள் வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ எடுத்துச் செல்ல வேண்டியது அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் வைத்திய அதிகாரிகளின் தலையாய கடமையாகும்.

முடிவாக மேற்கூறிய கருத்துக்களை கவனித்து, வெற்றிகரமாக செயல்படுவதற்கு பல்கலைக் கழக புத்திஜீவிகள், வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுஸ்தாபனங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அவர்கள் இதனை மேற்கொள்ள முன்வரவேண்டும். இத்தகைய சேவை காலத்தின் கடமை என்பதைவிட காலத்தின் தேவை என்றே கருதலாம். - உமா

## ஈராக்கிய தூதுவர்களை பிரிட்டன் வெளியேற பணிப்பு

(லண்டன்)
பிரிட்டனிலுள்ள ஈராக் தூதுவராலயத்தைச் சேர்ந்த ராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகளை உட்பட ஈராக்கியர்கள் அனைவரையும் நாட்டை விட்டு 24 மணிநேரத்திலும் வெளியேறும்படி பிரிட்டன் கோரியுள்ளது.

வளைகுடாவில் போர் மூளுமானால் உலகெங்கும் கெரில்லாத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என ஈராக் அறிவித்தமையினைத் தொடர்ந்து பிரிட்டன் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

## சான்றிதழ்கள் உடன்வழங்குவது இயலாத காரியமாம

(யாழ்ப்பாணம்)
யாழ் செயலக பிறப்பு இறப்பு பதிவு அலுவலகத்திற்குத் தேவையான சான்றிதழ் பதிவுப் புத்தகங்கள் எடுத்துவரப்பட்டாலும் சான்றிதழ்களை விண்ணப்பித்த அனைவருக்கும் உடனடியாகச் சான்றிதழை வழங்குவது இயலாத காரியம் என்று இந்த அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த அலுவலகத்தில் தற்போது சுமார் 35 000 விண்ணப்பங்கள் தேங்கி உள்ளன. இவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கு சான்றிதழ் பதிவுப் புத்தக இல்லை என்று காரணம் சொல்லப்பட்டது. அடுத்து இதுவரை இருக்கும் "குமணா" என்ற கப்பலில் இப்புத்தகங்களை ஏற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். புத்தகங்கள் வந்து சேர்ந்தாலும் நாளொன்றுக்கு 300 சான்றிதழ்களையே வழங்கக் கூடியதாக உள்ள இந்நிலையில் புதிய விண்ணப்பங்களை ஏற்கத் தொடங்கும் பட்சத்தில் தினமும் 500 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வரும் என்றும் இதனால் தொடர்ந்தும் இந்நிலை இருக்கும் என்றும் இவ்வலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## மூலப்பிரதிகள் வராதமையால் வவுச்சர்கள் வழங்கவில்லை

கடந்த ஐந்து மாதங்களாக ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்தவர்களுக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு உரிய கடிதத்தின் மூலப்பிரதிகள் எதுவும் யாழ் செயலகத்துக்கு வந்து சேராததினால் இவர்களுக்குரிய வவுச்சர்கள் வழங்கப்படவில்லை.

விண்ணப்பித்த பலருக்கு கொடுப்பனவுகளுக்குரிய கடிதத்தின் பிரதிகள் வந்துசேர்ந்துள்ளன. இதற்கு வைத்து இவர்களுக்குரிய ஆரம்ப வேலை ஒன்றை செயலக ஓய்வூதியக்கிளை அதிகாரிகள் தயாரித்து தயாராக வைத்துள்ளனர். மூலப்பிரதிகள் கிடைத்ததும் வவுச்சர்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர். (க)

# அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி நிபந்தனையற்ற மன்னிப்பு

(புதுடில்லி)

இந்திய மத்தியத் துறை வர்த்தக மற்றும் சட்டத் துறை அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி மக்களவை சபாநாயகர் ரவிராயைக் கைது செய்வேன் என்று கூறி மிரட்டியதற்காக அவரிடம் நிபந்தனை அற்ற வகையில் மன்னிப்புக் கோரினார்.

நேற்று மக்களவையான லோக்சபா கூடியபோது சபாநாயகர் ரவிராய் சுப்பிரமணியம் சுவாமியை பேசஅழைத்தபோது சபையில்அவரைப்பேசவிடாது ஆர்ப்பாட்டங்களும், கூச்சல்களும் இடம்பெற்றன. சுப்பிரமணியம் சுவாமியைப் பதவியில் இருந்து விலகவேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனைத்தொடர்ந்து சபாநாயகர் ரவிராயின் அலுவலக அறையில் தனக்கும்அவருக்கும் இடையே நிகழ்ந்தவை குறித்துசுப்பிரமணியம்சுவாமி மன்னிப்புக்கோரினார்.

இந்தச்சபையையும், திரு.ரவிராய் அவர்களையும் நான் பெரிதும் கௌரவிக்கின்றேன்; மதிக்கின்றேன் என்று நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரி இந்தியப்பாராளுமன்றத்தில் நேற்றுப்பேசிய டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியிருக்கின்றார்,

மிகவும் குறுகிய தன்னிலை விளக்கமளித்த திரு. சுப்பிரமணியம் சுவாமி, விவகாரத்தை இத்துடன் முடித்து விடுங்கள் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதனைத்தொடர்ந்து இந்த விவகாரம் இத்துடன முடிவுக்கு வந்துவிட்டது என்று சபாநாயகர் ரவிராய் அறிவித்தார்.

## சோவியத் குடியரசுகளுடன் கொர்பசேவ் உடன்பாடு

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக அனைத்து சோவியத் குடியரசுகளுடன் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி கொர்பசேவ் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மொஸ்கோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் 1991 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள குறையை எப்படித் தீர்ப்பது என்பது குறித்து 15 குடியரசுத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியதாகவும் அடிப்படைக் கோட்பாடுகளில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை சோவியத்தில் ஏற்பட்டுள்ள இப்போதைய நிலைமையை கட்டுப்படுத்த முடியும் என்றும் அந்த நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## வீதியோர மோதகத்தினால் குடும்பத்திற்கு வயிற்றோட்டம்

(மானிப்பாய்)

வீதியில் வைத்து விற்பனை செய்யப்பட்ட மோதகத்தை உண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வயிற்றோட்டத்தினால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் தந்தை தாய், மகன் ஆகிய மூவரும் வீதியோரத்தில் வைத்து விற்பனை செய்யப்பட்ட மோதகத்தை உண்டதைத் தொடர்ந்து வயிற்றோட்டமும், வாந்தியும் ஏற்பட்டது. இதனால் இவர்கள் மூவரும் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## கடுங் குளிருக்கு 46 பேர் பலி

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் கடும் குளிரினால் இது வரை 46 பேர் இறந்துள்ளனர் என அந்த மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் பனியினால் ஜம்மு காஷ்மீரில 28 பேரும், ஹிமாலயப் பிரதேசத்தில் 9 பேரும் ராஜஸ்தானில் 7 பேரும், உத்தரபபிரதேசத்தில் 2 பேரும் இறந்துள்ளனர்.

## குழந்தை கேணியில் வீழ்ந்து மரணம்

(கொடிகாமம்)

வீட்டின் இருந்து மெதுவாக

---

தமிழருக்கு எதிராக

குப்பதில் இருந்து இது நிரூபணமாகிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் நிறுத்தம் ஏற்பட்டாலும் கூட தமது ராணுவத்தினர் சிறிலங்கா அடற் பிராந்தியத்தின்மீது கண்காணிப்பை மேற் கொள்ளுதல் உட்பட வழமையான ரோந்து நடவடிக்கை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவார்கள் என்றும் உள்நாட்டு வெளிநாட்டு அச்சுறுத்தல்களை எதிர் நோக்கக் கூடிய தயார் நிலையில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

சிறிலங்கா

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திரு: அருளர் எம்மைச் சந்திக்க வேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரிவித்த போது மரியாதையின் நிமித்தமே அவரைச்சந்திக்க உடன்பட்டோம். இச் சந்திப்பின் போது சிறிலங்கா அரசுக்கும், எமக்குமிடையே தான் ஒரு தொடர்பாளராகச் செயற்பட அனுமதிக்க வேண்டும் என்ற கருத்தை அவர் வெளியிட்டார். எனினும் அதற்கான அதிகாரத்தை அவருக்கு நாம் வழங்கவில்லை. முடிந்தால் சுய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான திட்டங்களையும், ஆலோசனைகளையும் வழங்குங்கள். அதுவே எமக்குப் போதுமானது. சிறிலங்கா அரசுடன் தொடர்புகளை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்படுமிடத்து எமக்கு அதற்கு வேறு வழிவகைகள் உண்டு என்பதை அவருக்குத் தெட்டத் தெளிவாக உணர்த்தியிருந்தோம். இருந்தும் தமது முயற்சியினாலேயே இந்தப் போர் நிறுத்தம் ஏற்பட்டதாக கொழும்பில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமாகவும், பத்திரிகையாளர் மகாநாட்டை ஏற்பாடு செய்தும் போர் நிறுத்தம் தொடர்பான செய்திகளை வெளியிடுவது தன்னைப் பிரசாரப்படுத்த எடுக்கும் முயற்சியே

---




## டீசல் வழங்கினால் மட்டுமே அம்புலன்ஸ் சேவை

(மானிப்பாய்)

நோயாளர்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்வதற்கு அவர்கள் டீசல் வழங்கினால் மட்டுமே அம்புலன்ஸ் வண்டி அவர்களை ஏற்றிச் செல்கிறது.

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் இருந்து அவசர நோயாளர்களை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்கு நோயாளரிடம் டீசல் கேட்கப்படுகிறது. இவர்கள் டீசல் வழங்கினால் மட்டுமே ஏற்றிச் செல்லப் பட்டுகின்றனர். இதனால் பலரும் இப் பகுதியில் டீசல் கலன்களுடனே மருத்துவ மனைக்கு செல்கின்றனர்.

இந்த அம்புலன்ஸ் சேவையானது சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (ச)

---

புதிய இராணுவத்

துவம் அமர்த்தப்படவுள்ளன. இவர் 1987 ஆம் ஆண்டில் வடமராட்சியில் இடம்பெற்ற 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கைகளில் பங்கு கொண்டவராவார். மேலும் இவர் இராணுவத்தில் பல பொறுப்பான பதவிகளை வகித்திருப்பதுடன், திருக்கோணமலைப் பிராந்தியத் தளபதியாகவும், கூட்டு நடவடிக்கைகளின் தளபதியாகவும் கடமையாற்றியவராவார்.

இதற்கு முன்னர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக பிரிகேடியர் ஜாலியா நாமுனி கடமையாற்றினார்.

---

மலாக்கா

இவர்களிடம் இருக்கக் காணப்படவில்லை. மேலதிக புலன் விசாரணைகள் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது

---

படுவான்கரை

டுழியங்களைத் தொடர்ந்து நேற்று அப்பகுதியில் இருந்து மேலும் அப்பாவிப்பொதுமக்களுக்குச் சொந்தமான நான்குவீடுகளை குண்டுவைத்துத் தகர்த்தனர்.

இந்தத் தகர்ப்பைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலிருந்த ஏனைய குடும்பங்களும் தமது வீடுகளைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து உள்ளன.

---

சட்டவிரோத

தாலுகாவைச் சேர்ந்த எம், நடராஜன் என்பவர் மார்ச் 89 முதல் இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்ததை பொலிசாரால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இவர் தம் வசம் மாகர் சின்னராசா என்றபெயரில் போலிப் பாஸ் போட் ஒன்றையும், கந்தையா சுதர்சன் என்ற பெயரில் போலி அடையாள அட்டை ஒன்றையும் வைத்திருந்தார்.

---

அகதிமுகாமில்

யில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம் முகாம் அமைந்துள்ள பாடசாலை ஆரம்பமாகியுள்ளதை அடுத்து மாணவர்களுக்கும் இந்த வயிற்றோட்டம் பரவலாம் என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

---

தமிழர் பிரச்சினை

ழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தமானது நம்பிக்கை அளித்துள்ளது எனவும், அவர்கள் அரசியல் தீர்வுக்கு வர விரும்பியதையே காட்டுகிறது என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் சிறிலங்காவில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் சுயாட்சி அமைப்பு முறையை

# வீதியோர மோதகத்தினால் குடும்பத்திற்கு வயிற்றோட்டம்

(மானிப்பாய்)

வீதியில் வைத்து விற்பனை செய்யப்பட்ட மோதகத்தை உண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வயிற்றோட்டத்தினால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் தந்தை தாய், மகன் ஆகிய மூவரும் வீதியோரத்தில் வைத்து விற்பனை செய்யப்பட்ட மோதகத்தை உண்டதைத் தொடர்ந்து வயிற்றோட்டமும், வாந்தியும் ஏற்பட்டது. இதனால் இவர்கள் மூவரும் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## கடுங் குளிருக்கு 46 பேர் பலி

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் கடும் குளிரினால் இது வரை 46 பேர் இறந்துள்ளனர் என அந்த மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் பனியினால் ஜம்மு காஷ்மீரில் 28 பேரும், ஹிமாலயப் பிரதேசத்தில் 9 பேரும் ராஜஸ்தானில் 7 பேரும், உத்தரபபிரதேசத்தில் 2 பேரும் இறந்துள்ளனர்.

## குழந்தை கேணியில் வீழ்ந்து மரணம்

(கொடிகாமம்)

வீட்டில் இருந்து மெதுவாக நடந்து சென்ற ஒன்றரை வயதுடைய பெண் குழந்தையான தேவராசா செல்வி, வீட்டுக்கு அருகாமையில் உள்ள கேணி ஒன்றில் விழுந்து மரணமானார்.

இச்சம்பவம் கொடிகாமத்திற்கு அண்மையில் உள்ள தாவளை இயற்றாலை என்னும் கிராமத்தில் நடைபெற்றது. இக்குழந்தையை தாயார் வீட்டு முற்றத்தில் நிற்க விட்டு பக்கத்திலுள்ள கிணறு ஒன்றில் தண்ணீர் எடுக்கச் சென்றிருந்தார். அச்சமயம் இக்குழந்தை கேணியில் விழுந்து மூச்சுத்திணறி மரணமாகியது.

விசர் நரி கடித்த

கொண்டு செல்லப்பட்டு அங்கு இவர்களுக்கான தடுப்பு மருந்துகள் இல்லாததினால் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டு அங்கும் மருந்துகள் இல்லாததினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

உடனடியாக இவர்களுக்கான தடுப்பு மருந்துகள் ஏற்றத் தவறும் பட்சத்தில் இவர்களுக்கு உயிராபத்து ஏற்படுமென அஞ்சப்படுகிறது. (ச)

தமிழருக்கு எதிராக

குப்பதில் இருந்து இது நிரூபணமாகிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் நிறுத்தம் ஏற்பட்டாலும் கூட தமது ராணுவத்தினர் சிறிலங்கா அரசின் பிராந்தியத்தின் மீது கண்காணிப்பை மேற்கொள்ளல் உட்பட வழமையான ரோந்து நடவடிக்கை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவார்கள் என்றும் உள்நாட்டு வெளிநாட்டு அச்சுறுத்தல்களை எதிர் நோக்கக் கூடிய தயார் நிலையில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாயின்

இராணுவத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட கணேசனின் தாயாரும், 3 சகோதரிகளும் காட்டில் தஞ்சமடைந்திருந்தனர். திடீரென இவரது தாயார் இறந்து விட்டதாகக் கிடைத்த தகவலை அடுத்து உடனடியாக மரணச் சடங்கில் கலந்து கொள்ள முடியவில்லை என மனமுடைந்திருந்த கணேசன் (26) நச்சுத் திராவகம் அருந்தி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

பேச்சுவார்த்தைக்கு

கவனித்து வருவதாகவும் கடந்த மூன்று தினங்களில் நிலைமை முன்னேற்றகரமாகவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளதோடு பேச்சுவார்த்தையில் அரசாங்கம் நம்பிக்கை இழந்துவிடவில்லை எனவும் தெரிவித்தனர்.

மேலும் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதியைவிஸ்தரிக்க மாட்டார்கள் எனவும் அதே வேளை எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பார்கள் எனவும் அமைச்சர் ரஞ்சன் தெரிவிக்கவில்லை.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திரு: அருணர் எம்மைச் சந்திக்க வேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரிவித்த போது மரியாதையின் நிமித்தமே அவரைச்சந்திக்க உடன்பட்டோம். இச் சந்திப்பின் போது சிறிலங்கா அரசுக்கும், எமக்குமிடையே தான் ஒரு தொடர்பாளராகச்செயற்பட அனுமதிக்க வேண்டும் என்ற கருத்தை அவர் வெளியிட்டார். எனினும் அதற்கான அங்கீகாரத்தை அவருக்கு நாம் வழங்கவில்லை. முடிந்தால் சுய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான திட்டங்களையும், ஆலோசனைகளையும் வழங்குங்கள். அதுவே எமக்குப் போதுமானது. சிறிலங்கா அரசுடன் தொடர்புகளை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்படுமிடத்து எமக்கு அதற்கு வேறு வழிவகைகள் உண்டு என்பதை அவருக்குத் தெட்டத் தெளிவாக உணர்த்தியிருந்தோம். இருந்தும் தமது முயற்சியினாலேயே இந்தப் போர் நிறுத்தம் ஏற்பட்டதாக கொழும்பில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமாகவும், பத்திரிகையாளர் மகாநாட்டை ஏற்பாடு செய்தும் போர் நிறுத்தம் தொடர்பான செய்திகளை வெளியிடுவது தன்னைப் பிரசாரப் படுத்த எடுக்கும் முயற்சியே தவிர வேறல்ல.

உலகின் எல்லா நாடுகளிலும் உள்ள எமது கிளைகளுடனும் எமது தொடர்புகள் சீராகவே உள்ளன. நாளாந்தம் நடக்கும் நிகழ்வுகளை லண்டனில் உள்ள எமது சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரான திரு. கிட்டு அவர்களுக்கு தெரியப்படுத்துகிறோம். அவரின் ஆலோசனையையும் பெற்று வருகிறோம். போர் நிறுத்தம் தொடர்பான எமது முடிவை லண்டனில் உள்ள எமது அலுவலகத்தின் மூலமே சிறிலங்கா அரசுக்குத் தெரிவித்தோம். இந்த நிலையில் பிரான்சிஸ் உள்ள எமது உத்தியோகபூர்வ பேச்சாளரான திரு. லோறன்ஸ் திலகர் அவர்களுக்கு எமது மண்ணில் நடக்கும் விடயங்கள் எதுவுமே தெரியாது என்று திரு அருணர் அவர்கள் தெரிவித்திருப்பது நகைப்புக்கிடமானது. உண்மையில் இந்த மண்ணில் என்ன நடக்கின்றது என்பதை அறியாதவர் திரு. அருணரே. அத்துடன் தமது குழறுபடிகள் வெளியுலகத்துக்குத் தெரியவந்ததும் திரு. திலகருக்கும் எமக்கும் சமீப காலமாகத் தொடர்பு இல்லை என அவர் கூறியிருப்பது ஒரு முழுமையான மோசடியாகும் என்றும் தெரிவித்தார்.

னுவம் அர்ப்பணிக்கப்பட்டவுள்ளன. இவர் 1987 ஆம் ஆண்டில் வடமராட்சியில் இடம்பெற்ற 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கைகளில் பங்கு கொண்டவராவார். மேலும் இவர் இராணுவத்தில் பல பொறுப்பான பதவிகளை வகித்திருப்பதுடன், திருகோணமலைப் பிராந்தியத் தளபதியாகவும், கூட்டு நடவடிக்கைகளில் தளபதியாகவும் கடமையாற்றியவராவார்.

இதற்கு முன்னர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக பிரிகேடியர் ஜாவியா நம்முனி கடமையாற்றினார்.

மலாக்கா

இவர்களிடம் இருக்கக் காணப்படவில்லை. மேலதிக புலன் விசாரணைகள் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது

படுவான்கரை

டுழியங்களைத் தொடர்ந்து நேற்று அப்பகுதியில் இருந்து மேலும் அப்பாவிப்பொதுமக்களுக்குச் சொந்தமான நான்குவீடுகளை குண்டுவைத்துத் தகர்த்தனர்.

இந்தத் தகர்ப்பைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலிருந்த ஏனைய குடும்பங்களும் தமது வீடுகளைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து உள்ளன. இக்கிராமத்திலிருந்து வெளியேறிய மக்கள் கடும் மழையின் மத்தியிலும் அகப்பட்ட புகலிடங்களில் தஞ்சமடைந்து பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

இராணுவம்

தன. இச் சமயத்தில் தங்கள் வீடுகளைப் பார்க்கச் சென்ற மக்கள் அச்சமடைந்து மீண்டும் பாதுகாப்பான இடங்களுக்குத் திரும்பிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. இராணுவத்தினரின் இத் தாக்குதல்களுக்கு, விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல்கள் எதுவும் மேற்கொள்ளாதது குறிப்பிடத் தக்கது.

ரெலோ

வரை ரெலோவினர் இழுத்துச் சென்று குண்டாந்தடிகளாலும், ஆயுதங்களாலும் தாக்கி துடிக்க துடிக்க அடித்துக் கொன்றுள்ளனர்,

பட்டிருப்பு பாலத்தடியில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாம் காவலரணில் நின்ற ரெலோ இயக்க உறுப்பினர்களே மேற்படி நபரை கொடுமைகளின் பின் கொன்றனர். இந்த அப்பாவிபொதுமகனின் கொலையைத் தொடர்ந்து அவரின் குடும்பத்தினர் கைவிடப்பட்ட நிலையில் அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

வது குறிப்பிடத்தக்கது. (ச)

சட்டவிரோத

தாலுகாவைச் சேர்ந்த எம். நடராஜன் என்பவர் மார்ச் 89 முதல் இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்ததை பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவர் தம் வசம் மாகர் சின்ன ராசா என்ற பெயரில் போலிப் பாஸ்போட் ஒன்றையும், கந்தையா சுதர்சன் என்ற பெயரில் போலி அடையாள அட்டை ஒன்றையும் வைத்திருந்தார்.

அகதிமுகாமில்

யில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம் முகாம் அமைந்துள்ள பாடசாலை ஆரம்பமாகியுள்ளதை அடுத்து மாணவர்களுக்கும் இந்த வயிற்றோட்டம் பரவலாம் என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

தமிழர் பிரச்சினை

ழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தமானது நம்பிக்கை அளித்துள்ளது எனவும், அவர்கள் அரசியல் தீர்வுக்கு வர விரும்பியதையே காட்டுகிறது என்றும் தெரிவித்துள்ளது.

இதே வேளை சிறிலங்கா அரசாங்கம் சிறிலங்காவில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் சுயாட்சி அமைப்பு முறையைக் கொண்டுவர வேண்டும் என்றும், இதுதான் இப்போதுள்ள நிலைமைக்கு உடனடி தெளிவான தீர்வென்றும் தெரிவித்துள்ளது.

இதேபோலவே 'இந்தியன் எக்ஸ்பிறஸ்' பத்திரிகையும் தனது ஆசிரியர் தலையங்கத்தில் புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை வரவேற்பதுடன் இந்தியாவின் நிலையையும் எடுத்துக் கூறியுள்ளது.

சிறிலங்காவில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் இருந்து பெருமளவில் அகதிகள் வந்து சேர்வதால் இந்தியா நேரடியாகப் பாதிக்கப்படுவதால் இனப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட இந்தியா நடுவராக இருந்து தார்மீக ஆதரவை வழங்க வேண்டும் என்றும் கேட்டுள்ளது. இந்தியாவின் ஆதரவிற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளும் செவி சாய்க்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது

இப்போதுள்ள பிரச்சினையானது உடனடியாகத் தீர்க்கப்பட முடியாவிடினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தமானது அவர்கள் உண்மையிலேயே அமைதி ஏற்படுவதை விரும்புகின்றனர் என்பதையே காட்டுகின்றது எனவும் ''இந்தியன் எக்ஸ்பிறஸ்'' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மங்கேஷ்திர வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.